Journal of Valartamil, eISSN 2716-5507
Volume 6, No.2, 2025, (17-34)

இடைநிலைப்பள்ளியில் தமிழ்க்கல்வியின் இன்றைய நிலையும் எதிர்கொள்ளும் சவால்களும் அதற்கேற்ற பரிந்துரைகளும்

The Current State of Tamil Education in Secondary Schools, The Challenges it Faces, and Corresponding Recommendations

Sharan Suklam Ahtma Lingam, Manonmani Devi M.A.R Annamalai

Department of Modern Language, Faculty of Languages and Communication,
Universiti Pendidikan Sultan Idris, 35900 Tanjong Malim, Perak, Malaysia

email: manonmanidevi@fbk.upsi.edu.my

**Corresponding author:* Manonmani Devi

Received: 10 Oct 2025; **Revised:** 25 Nov 2025; **Accepted:** 10 Dec 2025; **Published:** 15 Dec 2025

To cite this article (APA): Ahtma Lingam, S. S., & M.A.R Annamalai, M. D. (2025). *இடைநிலைப்பள்ளியில் தமிழ்க்கல்வியின் இன்றைய நிலையும் எதிர்கொள்ளும் சவால்களும் அதற்கேற்ற பரிந்துரைகளும்*: The Current State of Tamil Education in Secondary Schools, the Challenges it Faces, and Corresponding Recommendations. *Journal of Valartamil*, *6*(2), 17-34. https://doi.org/10.37134/jvt.vol6.2.3.2025

ஆய்வுச் சுருக்கம்

மலாயாவில் தமிழ்க்கல்வி 1816ஆம் ஆண்டு பினாங்கு ஃபிரி ஸ்கூலில் தொடங்கப்பட்டு, கிறித்துவ சமய நிறுவனங்களால் வளர்க்கப்பட்டு, இன்று மலேசிய இடைநிலைப்பள்ளி வரை தொடர்கிறது. தமிழ்க்கல்வியின் வளர்ச்சிக்கு வித்திட்ட ஒருங்கிணைக்கப்பட்ட கலைத்திட்டம் (KBSM) எதிர்கொண்ட சவால்களின் விளைவாக, மாணவர்களின் முழுமையான வளர்ச்சியை உறுதி செய்யும் தர அடிப்படையிலான கலைத்திட்டம் (KSSM) அறிமுகப்படுத்தப்பட்டது. இக்கட்டுரை இடைநிலைப்பள்ளிகளில் தமிழ்மொழிக் கல்வி எதிர்கொள்ளும் சவால்களையும் சிக்கல்களையும் ஆராய்கிறது. தமிழ்மொழியைத் தேர்வுப் பாடமாகச் சேர்ப்பதில் பள்ளிகள் காட்டும் தயக்கம், தமிழ்மொழி கற்கும் மாணவர்களின் எண்ணிக்கைக் குறைவு, போதுமான தமிழாசிரியர்கள் இல்லாமை, 21ஆம் நூற்றாண்டுக் கற்றல் கற்பித்தல் முறைகளை ஆசிரியர்கள் வகுப்பறையில் முழுமையாக அமல்படுத்த முடியாமை போன்றவையே முதன்மையான சவால்களாக உள்ளன. இச்சிக்கல்களைக் களைய, குறைந்தபட்ச மாணவர் எண்ணிக்கையை ஐந்தாகக் குறைத்தல்,

தமிழ்மொழிக்கான பாடவேளைகளை அதிகரித்தல், தமிழ்மொழிப் பாடம் அட்டவணைக்குள் கட்டாயம் இடம்பெறுதல், ஆசிரியர்களுக்குத் தொடர்ச்சியான தொழில்நுட்பப் பயிற்சி அளித்தல் போன்ற பரிந்துரைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.

கருச்சொற்கள்: இடைநிலைப்பள்ளியில் தமிழ்க்கல்வி, இன்றைய நிலை, சவால்கள், பரிந்துரைகள்

Abstract: Tamil education in Malaya (now Malaysia) began in 1816 at the Penang Free School and was initially fostered by Christian missionary institutions. This foundation has developed into the current system extending to the Malaysian secondary school level. The integrated curriculum (KBSM), which initially drove the development of Tamil education, faced challenges that ultimately led to the introduction of the Standard-Based Curriculum (KSSM), designed to ensure the holistic development of students. This article explores the challenges and issues currently confronting Tamil language education in Malaysian secondary schools. The primary obstacles identified include the reluctance of schools to offer the Tamil language as an elective subject, a decreasing number of students choosing to learn Tamil, the insufficiency of qualified Tamil teachers, and the difficulties faced by educators in fully implementing 21st-century teaching and learning methodologies in the classroom. To address these issues, the study proposes several recommendations, such as reducing the minimum required student enrolment to five, increasing the number of lesson periods allocated for the Tamil language, mandating the inclusion of Tamil lessons within the regular timetable, and providing teachers with continuous technological training.

Keywords: Tamil Education in Secondary School, Current State, Challenges, Suggestions

முன்னுரை

மலாயாவில் தமிழ்க்கல்வி 1816ஆம் ஆண்டு தோற்றம் கண்டது. தொடக்கமாக, ஆங்கிலப் பள்ளிகளில் தமிழ்மொழி ஒரு பயிற்றுப் பாடமாகக் கற்பிக்கப்பட்டது. 1816ஆம் ஆண்டு, முதன்முதலில் பினாங்கு மாநிலத்தில் அமைந்துள்ள ஃபிரி ஸ்கூல் (Penang Free School) என்னும் ஆங்கிலப்பள்ளியில் போதகர் அட்சிங்ஸ் (Rev. R. Hutchings) என்பவரால் தமிழ் வகுப்புத் திறக்கப்பட்டது. இதுவே இந்நாட்டில் தமிழ்க்கல்வி வளர்ச்சிக்கு அடித்தளமாக அமைந்தது எனலாம். அதையடுத்து 1834இல் சிங்கப்பூரிலுள்ள ஃபிரி ஸ்கூலின் ஒரு பிரிவாக மற்றுமொறு தமிழ் வகுப்பு திறக்கப்பட்டது. 1850ஆம் ஆண்டில் மலாக்காவில் ஆங்கிலேயப் தமிழ்ப்பள்ளி ஒன்று நிறுவப்பட்டது. அதன் பின்னர், சிங்கப்பூரில் 1859இல் செயிண்ட் பிரன்ஸிஸ் சேவியர் மலபார் பள்ளியிலும் தமிழ் வகுப்புகள் தொடங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து 1895ஆம் ஆண்டு தலைநகர், செந்தூலில் ஆங்கிலோ தமிழ்ப்பள்ளி நிறுவப்பட்டது. 1897இல் அது மெத்தடிஸ்ட் ஆண்கள் பள்ளியாக மாற்றம் கண்டது. (சாமிக்கண்ணு, கின்ஸ்டன், 2018). பத்தொன்பதாம் நூற்றாண்டில் மலாயாவில் கிறித்துவ சமயத்தவரே அதிகமான தமிழ்ப் பள்ளிகளைத் தொடங்கித் தமிழ்க் கல்வியை வளர்த்தனர்.

இத்தொடக்கம் இருபதாம் நூற்றாண்டில் அதிகமான தமிழ்ப் பள்ளிகள் தொடக்கம் காண்பதற்கு வழிவகுத்துள்ளது. இத்தமிழ்ப்பள்ளிகளின் வழியே தமிழ்மொழியானது ஏழாம் வகுப்பைக் கடந்து இடைநிலைப்பள்ளிக் கல்வி வரையிலும் தொடரச் செய்தது. இப்போது படிவம் ஆறு வரை தமிழ்க்கல்வியைப் பெற வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இக்கட்டுரை இடைநிலைப்பள்ளிகளில் தமிழ்க்கல்வியின் இன்றைய நிலை, சவால், சிக்கல் போன்றவற்றை விளக்கவிருக்கின்றது.

முன்னுரை

மலாயாவில் தமிழ்க்கல்வி 1816ஆம் ஆண்டு தோற்றம் கண்டது. தொடக்கமாக, ஆங்கிலப் பள்ளிகளில் தமிழ்மொழி ஒரு பயிற்றுப் பாடமாகக் கற்பிக்கப்பட்டது. 1816ஆம் ஆண்டு, முதன்முதலில் பினாங்கு மாநிலத்தில் அமைந்துள்ள ஃபிரி ஸ்கூல் (Penang Free School) என்னும் ஆங்கிலப்பள்ளியில் போதகர் அட்சிங்ஸ் (Rev. R. Hutchings) என்பவரால் தமிழ் வகுப்புத் திறக்கப்பட்டது. இதுவே இந்நாட்டில் தமிழ்க்கல்வி வளர்ச்சிக்கு அடித்தளமாக அமைந்தது எனலாம். அதையடுத்து 1834இல் சிங்கப்பூரிலுள்ள ஃபிரி ஸ்கூலின் ஒரு பிரிவாக மற்றுமொறு தமிழ் வகுப்பு திறக்கப்பட்டது. 1850ஆம் ஆண்டில் மலாக்காவில் ஆங்கிலேயப் தமிழ்ப்பள்ளி ஒன்று நிறுவப்பட்டது. அதன் பின்னர், சிங்கப்பூரில் 1859இல் செயிண்ட் பிரன்ஸிஸ் சேவியர் மலபார் பள்ளியிலும் தமிழ் வகுப்புகள் தொடங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து 1895ஆம் ஆண்டு தலைநகர், செந்தூலில் ஆங்கிலோ தமிழ்ப்பள்ளி நிறுவப்பட்டது. 1897இல் அது மெத்தடிஸ்ட் ஆண்கள் பள்ளியாக மாற்றம் கண்டது. (சாமிக்கண்ணு, கின்ஸ்டன், 2018). பத்தொன்பதாம் நூற்றாண்டில் மலாயாவில் கிறித்துவ சமயத்தவரே அதிகமான தமிழ்ப் பள்ளிகளைத் தொடங்கித் தமிழ்க் கல்வியை வளர்த்தனர். இத்தொடக்கம் இருபதாம் நூற்றாண்டில் அதிகமான தமிழ்ப் பள்ளிகள் தொடக்கம் காண்பதற்கு வழிவகுத்துள்ளது. இத்தமிழ்ப்பள்ளிகளின் வழியே தமிழ்மொழியானது ஏழாம் வகுப்பைக் கடந்து இடைநிலைப்பள்ளிக் கல்வி வரையிலும் தொடரச் செய்தது. இப்போது படிவம் ஆறு வரை தமிழ்க்கல்வியைப் பெற வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இக்கட்டுரை இடைநிலைப்பள்ளிகளில் தமிழ்க்கல்வியின் இன்றைய நிலை, சவால், சிக்கல் போன்றவற்றை விளக்கவிருக்கின்றது.

முன்னுரை

மலாயாவில் தமிழ்க்கல்வி 1816ஆம் ஆண்டு தோற்றம் கண்டது. தொடக்கமாக, ஆங்கிலப் பள்ளிகளில் தமிழ்மொழி ஒரு பயிற்றுப் பாடமாகக் கற்பிக்கப்பட்டது. 1816ஆம் ஆண்டு, முதன்முதலில் பினாங்கு மாநிலத்தில் அமைந்துள்ள ஃபிரி ஸ்கூல் (Penang Free School) என்னும் ஆங்கிலப்பள்ளியில் போதகர் அட்சிங்ஸ் (Rev. R. Hutchings) என்பவரால் தமிழ் வகுப்புத் திறக்கப்பட்டது. இதுவே இந்நாட்டில் தமிழ்க்கல்வி வளர்ச்சிக்கு அடித்தளமாக அமைந்தது எனலாம். அதையடுத்து 1834இல் சிங்கப்பூரிலுள்ள ஃபிரி ஸ்கூலின் ஒரு பிரிவாக மற்றுமொறு தமிழ் வகுப்பு திறக்கப்பட்டது. 1850ஆம் ஆண்டில் மலாக்காவில் ஆங்கிலேயப் தமிழ்ப்பள்ளி ஒன்று நிறுவப்பட்டது. அதன் பின்னர், சிங்கப்பூரில் 1859இல் செயிண்ட் பிரன்ஸிஸ் சேவியர் மலபார் பள்ளியிலும் தமிழ் வகுப்புகள் தொடங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து 1895ஆம் ஆண்டு தலைநகர், செந்தூலில் ஆங்கிலோ தமிழ்ப்பள்ளி நிறுவப்பட்டது. 1897இல் அது மெத்தடிஸ்ட் ஆண்கள் பள்ளியாக மாற்றம் கண்டது. (சாமிக்கண்ணு, கின்ஸ்டன், 2018). பத்தொன்பதாம் நூற்றாண்டில் மலாயாவில் கிறித்துவ சமயத்தவரே அதிகமான தமிழ்ப் பள்ளிகளைத் தொடங்கித் தமிழ்க் கல்வியை வளர்த்தனர். இத்தொடக்கம் இருபதாம் நூற்றாண்டில் அதிகமான தமிழ்ப் பள்ளிகள் தொடக்கம் காண்பதற்கு வழிவகுத்துள்ளது. இத்தமிழ்ப்பள்ளிகளின் வழியே தமிழ்மொழியானது ஏழாம் வகுப்பைக் கடந்து இடைநிலைப்பள்ளிக் கல்வி வரையிலும் தொடரச் செய்தது. இப்போது படிவம் ஆறு வரை தமிழ்க்கல்வியைப் பெற வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இக்கட்டுரை இடைநிலைப்பள்ளிகளில் தமிழ்க்கல்வியின் இன்றைய நிலை, சவால், சிக்கல் போன்றவற்றை விளக்கவிருக்கின்றது.

இடைநிலைப்பள்ளிகளுக்கான தமிழ்மொழிக் கலைத்திட்டங்கள் இடைநிலைப்பள்ளிகளுக்கான ஒருங்கிணைக்கப்பட்ட கலைத்திட்டத் (KBSM) தோற்றமும் எதிர்கொண்ட சவாலும்

மலேசிய நாட்டுக் கல்விச் சட்டத்திற்கு ஏற்ப இடைநிலைப்பள்ளிகளில் தமிழ்மொழி ஒரு கூடுதல் தேர்வுப் பாடமாக வழங்கப்படுகிறது. தொடக்கக் காலத்திலிருந்து மலேசியக் கல்விச் சான்றிதழில் (SPM) தமிழ்மொழிப் பாடமானது ஒரு தேர்வாக குறிப்பிட்ட எண்ணிக்கையிலான மாணவருக்கு நடத்தப்படுகிறது. 1980களின் தொடக்கத்தில் கொண்டு வரப்பட்ட இந்த ஒருங்கிணைக்கப்பட்ட கலைத்திட்டம் (KBSR & KBSM) ஆறாம்

ஆண்டுத் தேர்வை எழுதிய இக்கலைத்திட்டத்தில் பயின்ற தொடக்கப்பள்ளி மாணவருக்கு 1988ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது (சாமிக்கண்ணு ஜெபமணி & கிங்ஸ்டன், 2018).

இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் வடிவமைக்கப்பட்ட இக்கலைத்திட்டமானது 21ஆம் நூற்றாண்டில் மலேசிய நாடு எதிர்நோக்கவிருக்கும் சவால்களுக்கு மலேசியரைத் தயார் செய்யும் வகையில் அமைக்கப் பெற்றிருந்தது. தொடக்கப்பள்ளியில் பெற்று வந்த தமிழ்மொழி ஆற்றலை மேலும் வளப்படுத்தவும் தேசியக் கல்வித் தத்துவத்திற்கு ஏற்ற மாணவரின் அறிவாற்றல், ஆன்மீகம், உடல், உள்ளம் (Intelek, Rohani, Jasmani, Emosi) ஆகிய கூறுகளுக்கேற்ற சமநிலையான மாணவரை உருவாக்கவும் இக்கலைத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது (Pusat Pembangunan Kurikulum, 2003).

இக்கலைத்திட்டத்தை உருவாக்கிய பிரிவானது அக்காலத்தில் கலைத்திட்ட முன்னேற்ற மையம் (Pusat Perkembangan Kurikulum) என்றழைக்கப்பட்ட மலேசியக் கல்வி அமைச்சின் கீழ் இயங்கும் ஒரு மையமாக அடையாளப்படுத்தப்பட்டது. தமிழ் புழங்கும் நாடுகளுக்கிடையே சமூக, பண்பாட்டு, வணிகத் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள இக்கலைத்திட்டம் உருவாக்கப்பட்டது. தமிழ்பேசுவோரை மட்டும் முன்னிறுத்தாமல் பிற மொழிக்காரரும் தமிழைப் பயில்வதற்கான நோக்கமும் இக்கல்வியேற்பாட்டில் வரையறுக்கப்பட்டது (Pusat Pembangunan Kurikulum, 2003).

இக்கலைத்திட்டத்தில் மொழித்திறன்களைப் பிறரிடைத் தொடர்பின்வழி கற்றல் பேறு என்ற பிரிவில் வகைப்படுத்தி, கேட்டல் & பேச்சு, வாசிப்பு, எழுத்துப் போன்ற திறன்களை ஒருங்கிணைத்து ஒன்றாக வரையறுத்துள்ளனர். இதில் குறிப்பாக, பேச்சு அல்லது எழுத்தின் மூலம் பிறருடன் கருத்துப் பரிமாற்றம் செய்தல், சிக்கல் களைதல், தேவையான சேவை, பொருள்களைப் பெறுதல் போன்ற கூறுகளுக்கு முதன்மை நோக்கம் வழங்கப்பட்டது. இக்கூறுகள் மலேசியர் 21ஆம் நூற்றாண்டு காலத்தை நோக்கிச் செல்லவும் கற்ற கல்வியை வாழ்க்கையோடு பயன்படுத்தவும் தேவையாக இருக்கக்கூடியது என உணரப்பட்டவையாகும் (Pusat Pembangunan Kurikulum, 2003).

இக்கலைத்திட்டத்தில் தோன்றிய சிக்கல்களானது, தமிழ்பேசுவோரைப் போலப் பிற மொழியாளரையும் தமிழ் கற்கத் திட்டமிடப்பட்ட இவ்வாவணத்தைக் கொண்ட இருபது ஆண்டுகளுக்கும் மேலான கற்றல் கற்பித்தல் நடவடிக்கையின் வழி குறிப்பிட்ட அளவில் மட்டுமே தமிழ் பேசும் பிற மொழியாளரை

உருவாக்கியுள்ளது எனலாம். அதோடு, பேச்சு & எழுத்துத் திறன்களில் அதிகம் கவனம் செலுத்தப்பட்ட கலைத்திடமாகவே இத்தமிழ்மொழிப் பாடத்திட்டம் இருந்துள்ளது குறிப்பிடப்பட்டுள்ளது. மாணவரது ஆக்கச் சிந்தனையும் ஆய்வுச் சிந்தனைக்கு மட்டுமே முக்கியத்துவம் வழங்கப்பட்டது ஆக, வாழ்வியல் கூறுகளை உள்ளடக்கிய உயர்நிலைச் சிந்தனைத் திறன் அதிகம் உள்ளிடப்படாத கலைத்திட்டமாக இது அமைந்திருந்தது. எனவே, புதிய கால மாற்றங்களுக்கேற்ற கலைத்திட்டம் தேவையாக அமைந்தது

இடைநிலைப்பள்ளிகளுக்கான தர அடிப்படையிலான கலைத்திட்டத் (KSSM) தோற்றமும் தீர்வும்

இடைநிலைப்பள்ளிகளுக்கான ஒருங்கிணைக்கப்பட்ட கலைத்திட்டத்தின் வழி 21ஆம் நூற்றாண்டிற்கான மலேசியரை உருவாக்கச் சவால் ஏற்பட்டதால் புதியதொரு கலைத்திடம் தேவைப்பட்டது. பன்னாட்டு அளவில் மலேசிய மாணவர் திறம்பெற்றிட அறிவு, சிந்தனைத் திறன், தலைமத்துவத் திறன், இருமொழி ஆற்றல், பண்பும் ஆன்மிகமும், தேசிய அடையாளம் ஆகிய ஆறு கூறுகளைச் சவாலாகச் சந்தித்த *KBSM* கலைத்திட்டத்தை மாற்றியமைத்துத் தேவைக்கேற்ற திறன்களை உள்ளடக்கி மறுசீரமைப்பு நடத்தப்பட்டது. மலேசியக் கல்வி மேம்பாட்டுத் திட்டத்திற்கேற்பவும் (PPPM 2013-2025) தொடர்ச்சியான தொடக்கப்பள்ளிக்கான தர அடிப்படையிலான கலைத்திட்டத்திற்காகவும் இடைநிலைப்பள்ளிக்கான தர அடிப்படையிலான கலைத்திட்டம் வடிவமைக்கப்பட்டது (Bahagian Pembangunan Kurikulum, 2018).

முந்தைய கலைத்திட்டத்தை உருவாக்கிய கலைத்திட்ட முன்னேற்ற மையமானது பின்னாளில் கலைத்திட்ட மேம்பாட்டுப் பிரிவாகப் பெயர் மாற்றம் காணப்பெற்று, அதன் வெளியீட்டிலேயே இத்தர அடிப்படையிலான கலைத்திட்ட ஆவணம் உருவானது. இக்கலைத்திட்டத்தின் வழி, இனம், மதம், சமூகம், பொருளாதார ஏற்றத் தாழ்வின்றி மாணவரது ஈடுபாட்டை முன்னிறுத்திக் கற்றல் கற்பித்தல் பாடத்திட்டம் வரையறுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. மலேசியக் கல்விமுறையானது சந்திக்கவிருக்கும் பல்வேறு சவால்களைக் கடக்கவும் அதே வேளையில் மலேசியக் கல்வி மேம்பாட்டுத் திட்டத்தின் எதிர்பார்ப்புகளை நிறைவு செய்யும் வகையிலும் இந்தக் கலைத்திட்டம் வடிவமைக்கப்பட்டது. இதன்வழி, 21ஆம் நூற்றாண்டை எதிர்கொள்ளும் மனிதனாகவும் சிறந்த குடும்பம், சமுதாயம், நாடு வேண்டும் குடிமகனாகவும் பங்களிப்பை ஒருவன் வழங்கவியலும் (Bahagian Pembangunan Kurikulum, 2018).

இக்கலைத்திட்டத்தில் தமிழ்மொழிக்கென்று நன்கு பரிசீலித்த காலத்திற்கேற்ற திறன்களை மட்டும் உள்ளடக்கிய பாடத்திட்டமாக உள்ளிடப்பட்டுள்ளது. தொடக்கப்பள்ளியில் கற்பிக்கப்படும் தமிழ்க்கலைத்திட்டத்தின் தொடர்ச்சியாக இந்த இடைநிலைப்பள்ளித் தமிழ்மொழிக் கலைத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இக்கலைத்திட்டமும் தமிழ் வழங்கும் நாடுகளுக்கிடையிலான சமூகம், பண்பாடு, வணிகம் தொடர்பான தொடர்புகளை ஏற்படுத்தவும் இணக்கமான நட்புறவை ஏற்படுத்தவும் முக்கியத்துவத்தை அளிக்கின்றது. இக்கலைத்திட்டத்தின் குறியிலக்காக, சமுதாயத் தொடர்பினை மேம்படுத்தவும் ஏரணமான தகவல்களைப் பெற்று முறையாகக் கையாளவும் பல்வகை பனுவல்களை வாசித்து உய்த்துணரவும் வேண்டிய சிறந்த தமிழறிவை ஒரு மாணவர் பெறுவதைக் கொண்டுள்ளது (Bahagian Pembangunan Kurikulum, 2018).

இக்கலைத்திட்ட அமைப்பு ஆறு கூறுகளை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பெற்றுள்ளது. அதாவது, தொடர்பு, ஆன்மிகம் – நடத்தை – பண்பு, மனிதவியல், சுய சால்புடைமை, உடல்வளர்ச்சியும் முருகுணர்ச்சியும், அறிவியலும் தொழில்நுட்பமும் ஆகியவை ஆகும். தொடர்பானது வாய்மொழியாகவோ பிற வகையிலோ மொழியாற்றலைக் கைவரப்பெறுதல் என்பதாகும். ஆன்மிகம், நடத்தை, பண்பு ஆகியவை அன்றாட வாழ்வில் இறை நம்பிக்கையுடனும் நேர்மை, நன்னடத்தையுடனும் இருப்பதைக் குறிக்கின்றது. அடுத்து, மனிதவியல் என்பது, இருபத்தொன்றாம் நூற்றாண்டில் வாழும் குடிமக்களை உருவாக்குவதாகும். சுய சால்புடைமை என்பது கலைத்திட்டம், புறப்பாடம் வழி தலைமைத்துவத்தையும் நற்பண்பையும் வலுப்படுத்துவதாகும். மேலும், உடல் வளர்ச்சியும் முருகுணர்ச்சியும் தனி மனித நல்வாழ்விற்குத் தேவையான உடற்கூறையும் சுகாதாரத்தையும் சார்ந்த அறிவு, திறன், பண்பைக் கொண்டிருப்பதாகும். இறுதியாக அறிவியலும் தொழில்நுட்பமும் காலத்திற்கேற்ற அறிவியல், கணிதம், தொழில்நுட்ப அறிவைப் பெறுவதாகும் (Bahagian Pembangunan Kurikulum, 2018).

இடைநிலைப்பள்ளிகளுக்கான ஒருங்கிணைக்கப்பட்ட கலைத்திட்டமானது மாணவரது அடைவுநிலையை, தேர்வை மட்டும் முதன்மையாகக் கொண்டு வரையறுக்கப்பட்டுள்ளது பலரும் அறிந்ததே. ஆனால், இந்த இடைநிலைப்பள்ளிகளுக்கான தர அடிப்படையிலான கலைத்திட்டம் தேர்வை மட்டும் முன்னிறுத்தி மாணவரது அடைவுநிலையை உறுதி செய்யாது பள்ளி அளவிலான மதிப்பீட்டையும் (Pentaksiran Berasaskan Sekolah) வகுப்பறை மதிப்பீட்டையும் (Pentaksiran Bilik Darjah) இணைத்து மாணவரது அடைவுநிலையைத் (Band/Tahap Penguasaan) தொடர்ச்சியாக ஆண்டுத் தொடக்கம் முதல் ஆண்டு இறுதிவரை மதிப்பிட்டு மாணவரது சராசரியான அடைவுநிலையை உறுதி

செய்கிறது எனலாம். அதோடு, பிறரிடைத் தொடர்பின்வழிக் கற்றல் பேறு என வரையறுக்கப்பட்ட திறன்களானது இக்கலைத்திட்டத்தில் மொழித்திறனாகவே பிரிக்கப்பட்டு கற்றல் தரங்களாகவும் உள்ளடக்கத் தரங்களாகவும் பிரிக்கப்பட்டு வகைப்படுத்தப்பட்டன (Bahagian Pembangunan Kurikulum, 2018). தமிழைத் தேர்வுப்பாடமாக எடுத்தோரின் எண்ணிக்கை 2021ஆம் ஆண்டு 9, 557ஆக பதிவிடப்பட்டுள்ளது இதில் 95.8% தேர்ச்சி விகிதத்தைப் பதிவிட்டுள்ளது இக்கலைத்திட்டத்தின் வெற்றியை பறைசாற்றும் (Lembaga Peperiksaan, 2022).

இடைநிலைப்பள்ளிகளில் தமிழ்க்கல்வி எதிர்நோக்கிய சவால்களும் அதன் காரணிகளும் இடைநிலைப்பள்ளிகளில் தமிழ்மொழியைக் தேர்வுப் பாடமாத் தெரிவு செய்யும் வாய்ப்புக் கொடுக்கப்படுவதில்லை.

மலேசியாவில் ஏறக்குறைய 2,407 அரசு இடைநிலைப்பள்ளிகள் உள்ளன. அவ்வனைத்து இடைநிலைப்பள்ளிகளிலும் மலாய், ஆங்கில மொழியானது அடிப்படை மொழி பாடங்களாகவும், கட்டாயமாகத் தேர்வுப் பாடங்களாகவும் அமைகின்றன. ஆயினும், தமிழ்மொழியும் சீனமொழியும் அப்படி அல்லாது, கூடுதல் மொழி பாடங்களாக மட்டுமே தெரிவு செய்யப்பட்டு வருகின்றன. இச்சூழலானது எல்லா இடைநிலைப்பள்ளிகளிலும் காண முடிவதில்லை. இன்றளவிலும் ஒரு சில இடைநிலைப்பள்ளிகளில் தமிழ்மொழியைக் கூடுதல் மொழிப் பாடமாகக் கூட ஏற்றுக்கொள்ளாத நிலை உள்ளது. இச்சிக்கலானது நகர்புற இடைநிலைப்பள்ளிகளைக் காட்டிலும், புறநகரிலுள்ள இடைநிலைப்பள்ளிகளிலே அதிகமாக ஏற்படுகிறது. இச்சிக்கலை நியாயப்படுத்துவதற்குச் சில கல்வி அதிகாரிகளும், இடைநிலைப்பள்ளி முதல்வர்களும் தொடர்ந்து பல காரணங்களைக் கூறி வருகின்றனர். அவற்றுள் முதன்மையான காரணமாவது, 15க்கும் குறைந்த எண்ணிக்கையிலான மாணவர்களே தமிழ்மொழியைக் கற்க முன்வருகின்றனர் என்பதாகும்.

சில இடைநிலைப்பள்ளிகளில் இயற்பியல், வேதியல், உயிரியல், கூடுதல் கணிதம், நன்னெறிக் கல்வி போன்ற பாடங்களைக் கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை 15க்கும் கீழே இருக்கும் பொருட்டு, அப்பள்ளிகளின் முதல்வர்களோ கல்வி அதிகாரிகளோ அப்பாடங்களை ஒதுக்கி வைப்பதல்ல. ஆனால், தமிழ்மொழியும் சீனமொழியும் மட்டுமே இது போன்ற விதிகளுக்கும் கட்டுப்பாடுகளுக்கும் உட்படுத்தப்பட்டு வருகின்றன. “இக்காரணம் ஏற்புடையதாக இல்லை”, என பி.கே.ஆர்

கோலசிலாங்கூர் பணிக்குழு உறுப்பினரான எஸ்.குணசேகரன், முன்னாள் மாவட்ட கவுன்சிலர் ஆர்.மோகன், டி.தளபதி, சமூக ஆர்வலர்களான எம்.வேளாங்கண்ணி, எம்.அந்தோணி ஆகியோர் ஊடகத்தில் தங்களது கருத்தினைப் பதிவு செய்துள்ளனர். "மற்ற முக்கியப் பாடங்களில், மாணவர்கள் பரிந்துரைக்கப்பட்ட எண்ணிக்கையை விட குறைவாக இருந்தாலும், தொடர்ந்து வகுப்புகளைத் தொடரும் சூழலில், ஏன் தமிழ்மொழி பாடத்தில் மட்டும் இவ்வாறு பாகுபாடு காட்ட வேண்டும்?", என அவர்கள் குரலெழுப்பினர்.

மாணவர்களின் எண்ணிக்கை மட்டுமல்லாது, இதர காரணங்களை முன்வைத்தும் சில இடைநிலைப்பள்ளியின் தலைமையாசிரியர்கள் தத்தம் பள்ளியில் தமிழ்மொழியைக் கூடுதல் பாடமாகச் சேர்த்துக் கொள்ள மறுக்கின்றனர். இடைநிலைப்பள்ளியில் பயிலும் மாணவர்கள் எல்லோரும் குறைந்தபட்சம் 8 பாடங்கள் பயிலும் சூழல் இருக்கையில், தமிழ்மொழி பாடத்தையும் கூடுதலாகக் கற்கும் மாணவர்களுக்கு இதர பாடங்களில் கவனக்குறைவு ஏற்படக்கூடும் என்றும், இதனால் எஸ்.பி.எம் தேர்வின் முடிவில் அவர்களது தேர்ச்சி பாதிப்படைவதோடு, பள்ளியின் அடைவுநிலையும் சரியக் கூடும் எனும் ஆதாரமற்ற கணிப்புகளைக் காரணமாகக் கூறி, சில இடைநிலைப்பள்ளி முதல்வர்கள் தமிழ்மொழி பாடத்தைத் தவிர்த்து வருகின்றனர். சிலாங்கூர் மக்கள் கல்விக் கலாச்சாரச் சமூக மேம்பாட்டுக் கழகமானது 2022ஆம் ஆண்டில் பெஸ்தாரி ஜெயாவில் உள்ள ஓர் இடைநிலைப்பள்ளியில் இச்சிக்கல் நிலவி வருவதைக் கண்டறிந்தனர். அப்பள்ளியில் பயிலும் அறிவியல் பிரிவு மாணவர்கள், தமிழ் மொழியையும் தமிழ் இலக்கியத்தையும் கூடுதல் பாடமாக எடுப்பதை அப்பள்ளியின் முதல்வர் தடுத்ததையொட்டி, அத்தலைமையாசிரியரின் செயலைச் சிலாங்கூர் மக்கள் கல்விக் கலாச்சாரச் சமூக மேம்பாட்டுக் கழகத்தின் பிரதிநிதியும் மஇகா மத்திய செயற்குழு உறுப்பினருமான சிவ சுப்பிரமணியம் கண்டித்தார். இச்சிக்கலைப் பற்றி ஊடகங்களிடையே பேசுகையில் "இஃது ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு சாக்குப்போக்கு" என்றும் அவர் கூறினார். பள்ளியின் அடைவுநிலைக்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுக்கும் மனப்போக்கு உடைய பள்ளி நிர்வாகத்தினர் இருப்பின், நாட்டில் தமிழ்மொழியைக் கற்பதற்கும் கற்பிப்பதற்குமான வாய்ப்புகள் தொடர்ந்து பறிக்கப்படும் என்றும் அவர் வருந்தினார் (தி ஸ்டார், 2022).

போதுமான மாணவர்களின் எண்ணிக்கையின்மை

ஒவ்வோர் ஆண்டும் இடைநிலைப்பள்ளிகளில் தமிழ்மொழியைக் கூடுதல் பாடமாகத் தேர்ந்தெடுத்துப் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கையானது குறைந்துகொண்டே வருகிறது. இச்சிக்கல் ஏற்படுவதற்கு முதன்மையான காரணமாக அமைவது பெற்றோர்களின் அக்கறையின்மையாகும். தற்காலத்தில் மலேசியாவில் வாழும் பெரும்பாலான பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளோடு தமிழ்மொழியில் பேசும் பழக்கத்தைக் கைவிட்டு வருகின்றனர். சிறுவயது முதலே ஆங்கில மொழியில் பேசிப் பழகினால் மட்டுமே, அவர்கள் பள்ளியிலும் ஆங்கில மொழியில் சிறப்பான தேர்ச்சி பெறுவார்கள் எனும் நம்பிக்கையின் அடிப்படையில் தமிழர்கள் மத்தியில் பெருகி வரும் கலாச்சார மாற்றமாகவே இஃது அமைகின்றது (சிவசெல்வன், 2021). தமிழ்மொழியைக் கற்பதைக் காட்டிலும் ஆங்கில மொழியையோ சீன மொழியையோ கற்றலே தத்தம் பிள்ளைகளின் எதிர்காலத்திற்கு உதவியாக இருக்குமெனப் பல பெற்றோர்கள் நம்புகின்றனர். ஆங்கில மொழியையோ சீன மொழியையோ கற்றறிவதன் மூலம், எதிர்காலத்தில் எளிமையாகப் பணியமர முடியும் எனும் சிந்தனையும் தற்காலத்தில் பலரது மனத்தில் ஆழமாகப் பதிந்துவிட்டது. தமிழ்மொழியைக் கற்பதனால் பொருளாதாரப் அளவில் எப்பயனும் இல்லை எனும் எண்ணமும், கல்வியானது ஒரு நல்ல வேலைக்கான திறவுகோல் மட்டுமே எனும் சிந்தைப்போக்கு உடைய பல பெற்றோர்களால் தமிழ்க்கல்வி இன்று புறக்கணிக்கப்பட்டு வருகின்றது. இதன் தாக்கமானது, தொடக்கப்பள்ளியில் மட்டுமல்லாது இடைநிலைப்பள்ளியிலும் தொடர்கிறது. தேசியப் பள்ளிகளிலும், சீன பள்ளிகளிலுமே தங்களது பிள்ளைகளைக் கல்வி கற்க அனுப்புவதற்குப் பல பெற்றோர்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர். இதனால், இடைநிலைப்பள்ளிகளில் தமிழ்மொழியைக் கற்கும் மாணவர்களின் எண்ணிக்கையும் படிப்படியாகக் குறைந்து வருகிறது. தமிழ்மொழியைக் கூடுதல் பாடமாகத் தேர்வு செய்யும் மாணவர்களின் எண்ணிக்கை குறைந்து வருவதால், தமிழ்மொழிப் பாடத்தை முழுமையாகத் தவிர்த்து வரும் இடைநிலைப்பள்ளிகளின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டு வருகிறது.

தமிழாசிரியர் போதாமை

மலேசியாவிலுள்ள பெரும்பாலான இடைநிலைப்பள்ளிகளில் ஒரு தமிழாசிரியர் மட்டுமே படிவம் 1 முதல் 5 வரையிலான மாணவர்களுக்குத் தமிழ்மொழியைக் கற்பித்து வரும் சூழல் உள்ளது. இச்சூழலானது ஆசிரியர்களுக்கு மட்டுமின்றி

தமிழ்க்கல்விக்கும் பெரும் சவாலாக அமைகின்றது. இச்சிக்கல் எழுவதற்கு இரண்டு காரணங்கள் முதன்மையாக அமைகின்றன. அவற்றுள் போதுமான மாணவர்களின் எண்ணிக்கையின்மை ஒன்றாகும். சில இடைநிலைப்பள்ளிகளில் எல்லா படிவத்திலும் 20க்கும் குறைவான மாணவர்களே தமிழ்மொழியைக் கூடுதல் பாடமாகத் தேர்வுசெய்து கற்பர். இதன் காரணத்தால், அனைத்துப் படிவ மாணவர்களுக்கும் தமிழ்மொழியைக் கற்பிக்க ஒரு தமிழாசிரியரே போதுமெனும் முடிவைப் பள்ளி நிருவாகத்தினர் எடுக்கின்றனர். இதர பாடங்களைக் காட்டிலும் தமிழ்மொழி பாடத்தைக் கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை குறைவாக இருந்தாலும், எல்லா படிவத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கும் ஓர் ஆசிரியர் மட்டுமே கற்பித்தாக வேண்டும் எனும் முடிவு நியாயமானதல்ல. இதனால், அவ்வாசிரியரால் எப்படிவத்தைச் சேர்ந்த மாணவர்களின் மீதும் முழுமையான கவனத்தைச் செலுத்த முடியாமல் போவதோடு, இதர பாட ஆசிரியர்களைக் காட்டிலும் கூடுதலான வேலைகளைச் செய்ய வேண்டிய கட்டாயமும் ஏற்படும். எடுத்துக்காட்டாக, எல்லா படிவ மாணவர்களுக்கும் தேர்வு தாள்களைத் தயார் செய்வது, எல்லா படிவ மாணவர்களுக்கும் ஆண்டறிக்கை உருவாக்குவது, எல்லா படிவத்தில் பயிலும் வெவ்வேறு வகுப்பு மாணவர்களுக்கு ஏற்ப நாள் பாடத்திட்டம் அமைப்பது போன்ற இதர ஆசிரியர்களைக் காட்டிலும் கூடுதலான வேலைகளைத் தமிழாசிரியர்கள் செய்தாக வேண்டும்.

இச்சிக்கல் எழுவதற்கான இரண்டாவது காரணமாவது, அரசாங்கத்தின் தரவுத்தளத்தின்படி எல்லா இடைநிலைப்பள்ளிகளிலும் போதுமான அளவிற்குத் தமிழ்மொழியைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் உள்ளனர் எனப் பதிவு செய்யப்பட்டிருக்கும் தவறான தகவலாகும். கல்வி அமைச்சின் மேற்பார்வையிலுள்ள *HRMIS* எனும் மனித வள மேலாண்மை தகவல் அமைப்பிலும் E-Operasi எனும் மலேசியக் கல்வியமைச்சின் தரவு மேலாண்மைத் தளத்திலும் பல இந்திய ஆசிரியர்கள் தாங்கள் தற்போது இடைநிலைப்பள்ளியில் போதிக்கும் பாடத்தைப் புதுப்பிக்காமல், அவர்கள் பட்டம் பெற்றுவந்தபோது தெரிவு செய்த முதன்மைப் பாடத்தையே வைத்திருக்கும் நிலை உள்ளது. இவ்வாசிரியர்கள் அனைவரும் தங்களது இளங்கலைப் பட்டப்படிப்பைத் தமிழ்மொழியில் முடித்திருந்தாலும், இடைநிலைப்பள்ளியில் மலாய் மொழி, வரலாறு, நன்னெறிக் கல்வி போன்ற வேறு பாடங்களைப் பல ஆண்டுகளாகக் கற்பித்து வருகின்றவர்கள் ஆவர். இதனால், மனித வள மேலாண்மை தகவல் அமைப்பில் எல்லா இடைநிலைப்பள்ளிகளிலும் போதுமான அளவிலான தமிழ்மொழி ஆசிரியர்கள் பணியாற்றி வருவதாகத் தவறான தகவல் பதிவாகிவருகிறது. இதன் காரணத்தால், குறிப்பிட்ட சில இடைநிலைப்பள்ளிகளில் எல்லா படிவத்தைச்

சேர்ந்த மாணவர்களுக்கும் தமிழ்மொழி மட்டுமல்லாது தமிழ்மொழி இலக்கியத்தையும் ஓர் ஆசிரியர் மட்டுமே கற்றுத்தர வேண்டிய கட்டாயமும் சில பள்ளிகளில் மாணவர் போதுமான அளவில் இருந்தும் தமிழ்ப்படித்த ஆசிரியர் தற்பொழுது பிற பாடங்களைக் கற்பிப்பதால் தமிழ் கற்பிக்க வசதியில்லாமல் போதலும் ஏற்படுகிறது.

கல்வி சார்ந்த மேம்பாடுகளை உள்ளடக்கிக்கொள்ளாத ஆசிரியர்கள்

கல்வியானது ஒரு செயலியைப் போல அவ்வப்போது பல புதிய மேம்பாடுகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகிறது. இதனால், ஆசிரியர்களும் அவ்வப்போது அம்மேம்பாடுகளை ஏற்று, தங்களை மேம்படுத்திக்கொள்ள வேண்டும். ஆயினும், இடைநிலைப்பள்ளிகளில் பணிபுரியும் தமிழ்மொழி ஆசிரியர்கள் சிலருக்குக் கல்வி சார்ந்த ஒருசில மேம்பாடுகளை ஏற்பதில் சிக்கல் ஏற்படுகிறது. பெரும்பாலான ஆசிரியர் மேம்பாட்டுத் திட்டங்களானது, புதிதாக ஆசிரியர் பணியில் அமர்த்தப்படுபவர்களுக்குக் கல்வி அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. எடுத்துக்காட்டாகப், புதிய ஆசிரியர்களின் தொடர்ச்சியான தொழில் வளர்ச்சிக்கு ஆதரவளிக்கும் வகையில் கல்வி அமைச்சு புதிய ஆசிரியர் மேம்பாட்டுத் திட்டம் (Program Pembangunan Guru Baharu & Program Pembangunan Guru Baharu 2.0) வரையறுத்துள்ளது. இத்திட்டத்தின் வழி அனுபவம் வாய்ந்த வழிகாட்டி ஆசிரியரின் வழிகாட்டுதலின் கீழ் புதிய ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள். பள்ளியின் பணிச்சூழல், கலாச்சாரம் பற்றி அறிந்துகொள்வதற்கும் நாட்டின் கல்வி முறை தொடர்பான ஆழமான அறிவைப் புதிய ஆசிரியர்களுக்குப் புகட்டுவதுமே இத்திட்டத்தின் முதன்மை நோக்கங்களாகும். ஆயினும், இத்திட்டமானது எல்லா இடைநிலைப்பள்ளியில் பணிபுரியும் தமிழ்மொழி ஆசிரியர்களுக்கும் பொருந்துவதில்லை. மலேசியாவிலுள்ள அனைத்து இடைநிலைப்பள்ளிகளிலும் ஒன்றிற்கும் மேற்பட்ட தமிழ்மொழி ஆசிரியர்கள் இருப்பதல்ல. குறிப்பாகப் புறநகரிலுள்ள இடைநிலைப்பள்ளிகளில் ஒரு தமிழ்மொழி ஆசிரியர் பணி ஓய்வு பெற்ற பிறகு அல்லது இடமாற்றலாகிச் சென்ற பிறகே மற்றொரு தமிழ்மொழி ஆசிரியர் பணியமர்த்தப்படுகிறார்கள். அவ்வகையில், சில தமிழ்மொழி ஆசிரியர்களுக்கு இதுபோன்ற மேம்பாட்டுத் திட்டங்களினால் எவ்வித பயனும் இல்லாமல் போகிறது. அனுபவமுள்ள மூத்த ஆசிரியரின் வழிகாட்டல் இல்லாமல், இடைநிலைப்பள்ளியில் பணியமர்த்தப்படும் புதிய தமிழ்மொழி ஆசிரியர்களால், அப்பள்ளியிலுள்ள மாணவர்களுக்கு

ஏற்ற கற்றல் கற்பித்தல் அணுகுமுறை என்ன என்பதை அறிந்து உடனடியாகச் செயல்பட முடியாது.

ஆம் நூற்றாண்டுக் கற்றல் கற்பித்தல் முறைகளை அமல்படுத்தாமை

இன்றைய மாணவர்களுக்குப் பல்வேறு கல்விமுறைகளும் கற்றல் முறைகளும் தேவைப்படுகின்றன. பல்வேறு முறையிலான அணுகுமுறைகளின் பயன்பாடு கற்றல் கற்பித்தலில் அமல்படுத்தப்பட்டால் மட்டுமே, எல்லா நிலை மாணவர்களாலும் ஆசிரியரால் கற்பிக்கப்படும் பாடத்தைக் கவனிப்பதோடு, புரிந்துக்கொள்ளவும் முடியும். அவ்வகையில், மாணவர்களின் கவனத்தை ஈர்க்கவும், அவர்களுக்கு எளிமையான முறையில் பாடத்தைக் கற்பிக்கவும் 21ஆம் நூற்றாண்டுக் கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள் பல உள்ளன. அவற்றுள் குறிப்பாகத் தொழில்நுட்பத்தை அடிப்படையாகவும் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ள 21ஆம் நூற்றாண்டு கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள் மாணவர்களுக்கு மிகவும் விருப்பமானதாக அமைகின்றன. ஆயினும், அவ்வணுகுமுறைகளைத் தமிழ்மொழிக்கேற்ப மாற்றம் செய்து, அவற்றை வகுப்பறையில் பயன்படுத்துவதில் இடைநிலைப்பள்ளியைச் சேர்ந்த தமிழ்மொழி ஆசிரியர்கள் பல சிக்கலை எதிர்நோக்குகின்றனர். எடுத்துக்காட்டாக, Wordwall, Flippity, Quizziz, Kahoot போன்ற தொழில்நுட்பத்தை மையப்படுத்திய கருவிகளைக் கொண்டு, தமிழ்மொழி பாடத்திற்கேற்ற பயிற்றுத்துணைப்பொருள்களைத் தயாரிப்பதற்கு நீண்ட நேரம் தேவைப்படும்.
சில சமயங்களில் தமிழ்ச்சொற்களை அம்மாதிரியான செயலிகளில் தட்டச்சு செய்ய முடியாத சூழலும் ஏற்படும். மலாய், ஆங்கிலம் போன்ற இதர மொழிப்பாட ஆசிரியர்களுக்கு இம்மாதிரியான சிக்கல்கள் ஏற்படுவதில்லை. பயிற்றுத்துணைப்பொருள்களை உருவாக்க உதவும் பெரும்பாலான தொழில்நுட்ப தளங்களின் மூல மொழி ஆங்கிலம் என்பதால், அவர்களால் எளிமையாக அவற்றைத் தங்களது கற்றல் கற்பித்தலில் உட்படுத்திக்கொள்ள முடிகிறது. அதுமட்டுமின்றி, தமிழ்மொழி பாடவேளையில் மாணவர்கள் தத்தம் வகுப்பறையிலிருந்து வேறொரு அறைக்கு மாற்றலாகிச் சென்றுதான் பாடத்தைக் கற்க வேண்டிய சூழல் எல்லா இடைநிலைப்பள்ளிகளிலும் உள்ளது. அதோடு, வகுப்பறையில் தொழில்நுட்பம் பயன்படுத்தும்போது சில தொழில்நுட்பக் கோளாறுகள் நடப்பதற்கான வாய்ப்பு உள்ளது. இதனால், பாட வேளையில் நேரக் குறைபாடு ஏற்படுவதற்கான வாய்ப்பும் மிகவும்

மிகுதியாக இருப்பதால், பெரும்பாலான தமிழ்மொழி கற்பிக்கும் ஆசிரியர்கள் தங்களது வகுப்பில் தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட 21ஆம் நூற்றாண்டு கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகளைப் பயன்படுத்துவதல்ல.

இடைநிலைப்பள்ளியில் தமிழ்க்கல்வி எதிர்நோக்கும் சவால்களுக்கான கலந்துரையாடலும் பரிந்துரைகளும்

இடைநிலைப்பள்ளிகளில் தமிழ்மொழி எடுக்கும் மாணவர்களின் எண்ணிக்கை குறைவாக இருத்தல், இடைநிலைப்பள்ளிகளில் தமிழ்க்கல்வி எதிர்நோக்கும் சிக்கல்களில் முதன்மையானதாகக் கருதப்படுகின்றது. தொடக்கப்பள்ளியில் தமிழ்ப் பயிலும் மாணவர்களில் பெரும்பாலானோர் இடைநிலைப்பள்ளிகளில் தமிழ்ப் பாடத்தைத் தேர்வு செய்வதில்லை. பாடங்களின் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு மாணவர்கள் இம்முடிவினை எடுக்கின்றனர். குறிப்பாக, நான்காம், ஐந்தாம் படிவ மாணவர்களாவர். பாடங்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதனால், தமிழ்மொழியைக் கூடுதலாக எடுத்தால், அவர்களால் சரியாகப் படிக்க முடியாது எனும் எண்ணத்தினால், தமிழ்ப் பாடத்தைப் பதிவு செய்ய மறுக்கின்றனர். தமிழ்மொழிப் பாடத்தைத் தேர்வுப் பாடமாக வைத்திருப்பதால், மாணவர்கள் இம்மாதிரியான முடிவினை எடுக்கின்றனர். எனவே, பள்ளியில் பணிப்புரியும் தமிழாசிரியர்கள் தமிழ்ப்பள்ளிகளிலிருந்து வரும் மாணவர்களுக்குத் தமிழ்ப்பாடத்தைக் கட்டாயமாக்க வேண்டும். ஆறு ஆண்டுக் காலமாகத் தமிழ்க்கல்வியை முறையே பயின்று வரும் மாணவர்களுக்குத் தமிழ்மொழியைத் தொடர்ந்து கற்பதில் சிக்கல் ஏற்படாது. எனவே, தமிழாசிரியர்கள் இதனைக் கருத்தில் கொண்டு இச்சிக்கலைக் களைய தமிழ்ப்பள்ளி மாணவர்களுக்குத் தமிழ்மொழிப் பாடத்தைக் கட்டாயப் பாடமாக்க வேண்டும்.

மாணவர்களுக்குத் தமிழ்மொழியைப் பயிற்றுவிக்கும் பாட வேளை மிகக் குறைவாக இருக்கிறது. பொதுவாக, புதுமுக வகுப்பு மாணவர்களுக்கு நான்கு பாட வேளையும் படிவம் ஒன்று முதல் ஐந்து வரையிலான மாணவர்களுக்கு மூன்று பாட வேளையும் ஒதுக்கப்பட்டுள்ளன. இப்பாட வேளையானது ஆறு பாட வேளையாக அதிகரிக்க வேண்டும். குறைவான பாட வேளையானது மொழியாளுமைப் பெறுவதற்கான போதுமான காலமாக இல்லை. எனவே, எண்ணிக்கையை அதிகரிப்பதனால் மாணவர்களின் நம்பிக்கையை அதிகரிக்க முடியும்.

ஒரு சில பள்ளிகளில் தமிழ்ப்பாடம் அட்டவணைக்கு வெளியில் கற்பிக்கப்படுகிறது. இம்மாதிரியான சூழலில் மாணவர்கள் பள்ளியில் தங்கி இவ்வகுப்பில் இணையும் சூழல் அமைகிறது. கூடுதலாகப் பள்ளியில் தங்கும் மாணவர்களுக்கு வகுப்பு முடிந்து, வீடு திரும்புவதில் சிக்கல் ஏற்படுகிறது. இதனைக்

காரணமாகக் கொண்டு, மாணவர்கள் தமிழ் வகுப்பில் இணையாமல் இருக்கின்றனர். எனவே, அனைத்துத் தமிழ்ப்பாட வேளைகளும் அட்டவணையில் கட்டாயம் இடம்பெற வேண்டும். மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் எளிமையான முறையில் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ள இது துணையாக அமையும்.

மேலும், தேசியப் பள்ளி மாணவர்கள் சிலர் இடைநிலைப்பள்ளிக்கு வந்த பின்னர், தமிழ்க் கற்க வேண்டும் எனும் எண்ணம் கொள்வர். முன்னர், தமிழ்க் கற்காத மாணவர்கள், தீடிரென ஒரு மொழியைக் கற்க இயலாது எனும் கூற்றினைப் பள்ளி நிருவாகம் முன் வைக்கிறது. இந்நிலையில் தமிழாசிரியர்கள் அடிப்படைத் தமிழ்க்கல்வியைப்பற்றி பள்ளி நிருவாகத்தினரிடம் பேச வேண்டும். அடிப்படைத் தமிழ்ப் பயிலும் மாணவர்களுக்கு அவ்வப்போது, தேர்வு வைத்து, பள்ளி நிர்வாகத்தினரிடம் அவர்களின் அடைவுநிலைக் குறித்து, விளக்க வேண்டும். இவ்வாறு செய்வதன்வழி, பள்ளி நிர்வாகத்தினரின் நம்பிக்கையைப் பெற முடியும். இதனால், பள்ளி நிருவாகத்தின் அனுமதியோடு அடிப்படைத் தமிழ் வகுப்பு நடைபெறும்.

மேலும், தற்காலத்தில் இடைநிலைப்பள்ளிகளில் தமிழ்மொழிப் பாடம் எடுக்கும் மாணவர்களின் எண்ணிக்கை 15க்கும் குறைவாக இருக்கக் கூடாதென விதி உள்ளது. 15க்கும் குறைவான மாணவர்கள் இருந்தால், அப்பள்ளியில் தமிழ்மொழிப் பாடம் நடத்தப்படாது. 15 மாணவர்கள் இல்லாத வேளையில் தமிழ் ஆர்வம் கொண்ட பிற மாணவர்களுக்கும் தமிழ்க்கல்வியைப் பெற முடியாத நிலை ஏற்படுகிறது. எனவே, இச்சிக்கலைக் களையும் வகையில் ஆசிரியர்கள் 15 மாணவர்கள் எனும் எண்ணிக்கையை ஐந்தாகக் குறைக்கலாம். அதாவது, ஐந்து மாணவர்களின் பெற்றோர்கள் கேட்டுக் கொண்டால்கூட அப்பள்ளியில் தமிழ்ப்பாடம் போதிக்கப்பட வேண்டும் என விதி மாற்றியமைக்கப்பட வேண்டும். இவ்வாறு செய்வதால், ஆர்வமுள்ள மாணவர்களால் தமிழ்க்கல்வியைப் பெற முடியும்.

அடுத்து, தமிழ்மொழிப் பாடத்தினால் பள்ளியின் ஒட்டுமொத்த தேர்வு அடைவுநிலையும் பாதிக்கப்படும் எனும் காரணத்தினால், இடைநிலைப்பள்ளிகளில் மாணவர்களுக்குத் தமிழ்மொழிப் பயிலும் வாய்ப்புக் குறைக்கப்பட்டுள்ளது. இச்சிக்கலைக் களையும் முன்னெடுப்புத் தமிழாசிரியர்களிடமே இருக்கிறது. தமிழ்மொழிப் பாடம் போதிக்கும் ஆசிரியர்கள், பள்ளியின் நிர்வாகத்தினரிடம் பேசி, இச்சிக்கலைக் களையும் வகையில் ஒவ்வொரு தேர்வின் போதும், மாணவர்களின் அடைவுநிலையைப் பள்ளி நிர்வாகத்தினருக்கு அறிவிக்க வேண்டும். அவ்வாறு செய்வதன்வழி, பள்ளி நிர்வாகத்தினருக்கு மாணவர்களின் அடைவுநிலைக் குறித்து விழிப்புணர்வு தோன்றுவதோடு, நம்பகத்தன்மையும் ஏற்படும்.

தொடர்ந்து, போதுமான தமிழாசிரியர்கள் இல்லாமை என்பதும் ஒரு சிக்கலாகக் கருதப்படுகின்றது. பொதுவாக, தமிழ்ப்பாடம் போதிக்கும் ஆசிரியர்கள், ஒரு பள்ளியில் ஒருவர் மட்டுமே இருக்கிறார்கள். குறைவான எண்ணிக்கையிலான மாணவர்களுக்கு ஓராசிரியர் போதும் எனும் எண்ணத்தில் இவ்வாறான தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றன. எனவே, தமிழ்ப்பள்ளிகளின் ஆசிரியர்களின் எண்ணிக்கையைக் அதிகரித்தல் அவசியமாகும். எடுத்துக்காட்டாக, இஸ்லாமிய பாடத்தை எடுக்கும் மாணவர்கள் குறைவாக இருக்கும் இடைநிலைப்பள்ளிகளில்கூட இரு படிவத்திற்கு ஓராசிரியர் என தளர்வுகள் வழங்கப்பட்டுள்ளது. ஆனால், 15க்கும் மேற்பட்ட மாணவர்கள் படிக்கும் தமிழ்ப்பாட வகுப்புகளுக்கு ஓராசிரியர் மட்டுமே இருக்கிறார். இந்நிலையானது மாற்றியமைக்கப்பட வேண்டும். அதிகமான எண்ணிக்கையிலான மாணவர்களுக்குக் கூடுதலான எண்ணிக்கையில் ஆசிரியர்களைப் பணிக்கு அமர்த்த வேண்டும். அதோடு, வேறு சில பள்ளிகளில் அடிப்படைத் தமிழ்ப் போதிப்பதற்குகூட கூடுதலான எண்ணிக்கையில் ஆசிரியர்களைப் பணிக்கு அமர்த்துவதில்லை. ஒரே ஆசிரியரால் எல்லா நிலையிலான மாணவர்களுக்கும் வகுப்பை நடத்த இயலாது. எனவே, இடைநிலைப்பள்ளிகளில் தமிழ்மொழிப் பாட ஆசிரியரின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும்.

21ஆம் நூற்றாண்டுக் கற்றல் கற்பித்தலில் சிக்கலாகப் பார்க்கப்படுவது, கல்வி சார்ந்த மேம்பாடுகளை உள்ளடக்கிக் கொள்ளாத ஆசிரியர்கள் இருப்பதாகும். 21ஆம் நூற்றாண்டுக் கற்றல் கற்பித்தலில் அதிக அளவிலான தொழில்நுட்பச் சாதனங்கள் பயன்படுத்தப்படுகின்றன. அவ்வகையில், தற்காலத்தில் ஆசிரியர்கள் இத்தகைய மாற்றங்களுக்கு ஏற்ப தங்களை மேம்படுத்திக் கொள்ள வேண்டும். எனவே, தொழில்நுட்பக் கல்வி சார்ந்த அல்லது மெய்நிகர் கற்றல் தளப் பட்டறைகளில் அனைத்து ஆசிரியர்களையும் இணைத்து கொள்ள வேண்டும். குறிப்பாக, வயதில் முதிர்ந்த ஆசிரியர்கள். ஏனெனில், வயதில் முதிர்ந்தோர் பாரம்பரிய வகுப்புகளை வழிநடத்துவதில் வல்லமைப் பெற்றவர்களாக இருப்பர். ஆனால், இயங்கலை வகுப்பு அல்லது தொழில்நுட்பக் கல்வி எனப் பார்க்கும்பொழுது, குறைவான திறனுடனே இருப்பர். எனவே, இவ்வாசிரியர்கள் இம்மாதிரியான வகுப்புகளில் இணைவதன்வழி, தங்கள் திறமையை மேம்படுத்திக் கொள்ள முடியும். மெய்நிகர் கற்றல் தளப் பட்டறைகள் வருடத்தில் இரண்டு, மூன்று மட்டும் நடத்தப்படாமல், ஒவ்வொரு மாதமும் நடத்தப்பட்டு அப்பட்டறைக்கான சான்றிதழ்கள் வழங்கப்பட வேண்டும். இம்மாதிரியான முயற்சிகள் ஆசிரியர்களின் கற்றல் கற்பித்தல் ஆர்வத்தை மேலும் தூண்டும்.

தமிழ்ப்பாட ஆசிரியர்கள் 21ஆம் நூற்றாண்டுக் கற்றல் கற்பித்தல் முறைகளை அமல்படுத்தாமல் இருப்பதும், தமிழ்க்கல்வியின் ஒரு சிக்கலாகக் கருதப்படுகின்றது. தற்காலத்தில் மாணவர்கள் பாரம்பரியக் கற்றல் கற்பித்தல் முறைகளைவிட தொழில்நுட்பம் சார்ந்த கற்பித்தல் முறைகளையே அதிகம் விரும்புகின்றனர். பாடத் துணைப்பொருள் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைக்கு மிகவும் முக்கியமானதாகும். ஆசிரியர்கள் கையாளும், உத்திகள், பொருள்கள் யாவும் ஆசிரியரின் கவனத்தை ஈர்க்கும் வகையிலே பயன்படுத்தப்படுகின்றன (சந்திரிகா, 2008). இயல்பாகவே, மாணவர்களுக்கு விளையாட பிடிக்கும். கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகள் விளையாட்டு முறையில் நடந்தால், மாணவர்களின் கவனத்தை மிக எளிதில் பெற முடியும் (சந்திரிகா, 2008). எனவே, ஆசிரியர்கள் இதனைக் கருத்தில் கொண்டு தமிழ்மொழிப் பாடத்தில் தொழில்நுட்பங்களை உட்புகுத்திப் பாடங்களைப் போதிக்க வேண்டும். விளையாட்டு அணுகுமுறையைப் பயன்படுத்தி, மிக எளிதில் மாணவர்களின் கவனத்தை ஈர்க்க முடியும். சான்றாக, *Wordwall, Flippity, Quizziz, Kahoot* முதலிய விளையாட்டுத் தளங்களின் வழி, மாணவர்களின் கவனத்தையும் ஆர்வத்தையும் ஈர்க்கும் வகையிலான விளையாட்டுகளைத் தயார் செய்ய முடியும். இந்த விளையாட்டுகளை மாணவர்கள் விளையாடும்பொழுது, மேலும் ஆர்வம்கூடி தமிழ்மொழிப் பாடத்தினை விரும்பிக் கற்பர்.

முடிவுரை

இடைநிலைப்பள்ளிகளில் தமிழ்க்கல்வியின் வளர்ச்சி, இடைநிலைப்பள்ளிகளில் தமிழ்க்கல்வி எதிர்நோக்கிய சவால்கள், இடைநிலைப் பள்ளிகளில் செயற்படுத்தப்படும் பாடத்திட்டங்கள், அப்பாடத்திட்டங்களைத் திட்டமிடும் பொழுதும் செயற்படுத்தும் பொழுதும் ஏற்பட்ட சிக்கல்கள், இடைநிலைப்பள்ளிகளில் தமிழ்க்கல்வியின் நிலையை மேலும் வளர்ச்சி அடைய செய்யும்படியான பரிந்துரைகள் போன்றவற்றைப் பற்றி கண்டிருந்தோம். இதையெல்லாம் நன்கு உணர்ந்து, தமிழராகப் பிறந்த நாம் அனைவரும் இடைநிலைப்பள்ளியில் மட்டுமில்லாமல், மழலையர் பள்ளி, தொடக்கப் பள்ளி, பல்கலைக்கழகம் போன்ற எல்லாவற்றிலும் தமிழ்க்கல்வி வளர்ச்சி அடைய உழைக்க வேண்டும்.

துணைநூற்பட்டியல்

Bahagian Pembangunan Kurikulum. (2018). *Dokumen Standard Kurikulum dan Pentaksiran KSSM (Bahasa Tamil Tingkatan 4 dan 5)*. Putrajaya: Kementerian Pendidikan Malaysia

Farahani (2021). Bahasa Tamil dikatakan dipinggirkan? Kami ulas isu semasa berkaitan hal ini. https://orangkata.my/isu-semasa/bahasa-tamil-dikatakan-dipinggirkan-kami-ulas-isu-semasa-berkaitan-hal-ini/

Fatimah Zainal (2022). School blasted for not allowing students to take Tamil subjects. https://www.thestar.com.my/news/nation/2022/05/12/school-blasted-for-not-allowing-students-to-take-tamil-subjects

Kelebihan MENGHANTAR Anak Ke Sekolah ALIRAN CINA Di Malaysia. Pendidikan Malaysia Sumber Info Pendidikan Dan Kerjaya Malaysia. https://www.pendidikanmalaysia.com/2017/06/kelebihan-sekolah-aliran-cina.html

Lembaga Peperiksaan. (2022). Laporan Analisis Keputusan Peperiksaan Sijil Pelajaran Malaysia Tahun 2021. Putrajaya: Kementerian Pendidikan Malaysia.

Panduan Pelaksanaan Program Pembangunan Guru Baharu (PPGB). Kementerian Pendidikan Malaysia. https://www.moe.gov.my/penerbitan1/1603-panduan-pelaksanaan-program-pembangunan-guru-baharu-ppgb-2015/file

Pusat Perkembangan Kurikulum. (2003). *Huraian Sukatan Pelajaran KBSM (Bahasa Tamil Tingkatan 4)*. Putrajaya: Kementerian Pendidikan Malaysia.

Pusat Perkembangan Kurikulum. (2003). *Huraian Sukatan Pelajaran KBSM (Bahasa Tamil Tingkatan 5)*. Putrajaya: Kementerian Pendidikan Malaysia.

Samuel, S. J. I. (2018). *பேரா மாநிலத் தமிழ்க்கல்வி வளர்ச்சியில் திருநெல்வேலித் தமிழ்க் கிறிஸ்தவர்களின் பங்கு* (The Contributions of Tirunelveli Tamil Christians in the Development of Tamil Education in the State of Perak). Journal of Tamil Peraivu (*தமிழ்ப் பேராய்வு ஆய்விதழ்*), 7 (2), 18-26.

Siva Selan (2021). Masih ramai sukar berbahasa Inggeris walaupun lebih sedekad belajar di sekolah. https://www.malaysianow.com/my/news/2021/02/16/masih-ramai-sukar-berbahasa-inggeris-walaupun-lebih-sedekad-belajar-di-sekolah

Sneddon, James (2003). The Indonesian Language: Its history and role in modern society. Sydney: University of South Wales Press Ltd. *பக்.* 73

Subramani, S. (2018). *விடுதலைக்குப் பின் தமிழ்க்கல்வி: பரிணாமமும் சவால்களும்* (Tamil Schools After The Independence: Evolution and Challenges). Journal of Indian Studies (*இந்திய ஆய்விதழ்*), 11, 8-31.

Uma Braba (2021). Adakah Garis Panduan Baharu Dalam Kpm Membawa Perubahan DALAM Pengajaran Bahasa Tamil di Tingkatan Enam? https://makkalosai.com.my/2021/08/18/adakah-garis-panduan-baharu-dalam-kpm-membawa-perubahan-dalam-pengajaran-bahasa-tamil-di-tingkatan-enam/

Wafa Aula (2018). Suka atau tidak, guru perlu ubah gaya pengajaran mereka – Pakar. https://www.astroawani.com/berita-malaysia/suka-atau-tidak-guru-perlu-ubah-gaya-pengajaran-mereka-pakar-171512

இராசேந்திரன் (). *ஆசிரியம். உமா பதிப்பகம்*

சண்முகம் (2007). *சயாம் மரண ரயில்* (3). *தமிழோசை*

சாமிக்கண்ணு, கிங்ஸ்டன் (2018). *மலேசியத் தமிழ்க்கல்வி வரலாறு. சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.*

ரேவதி துரை (2020). Not A Single Tamil Secondary School n Malaysia… Time to Establish One? https://varnam.my/28378/not-a-single-tamil-secondary-school-in-malaysia-time-to-establish-one/#:~:text=The%20one%20and%20only%20Tamil,Prime%20Minister%20Tunku%20Abdul%20Rahman.